Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

| | |
|---|---|
| Calendar | **CC. No.149/2019** |
| Deposition of Sworn Statement | **PW7** |
| Name | : **ரவி (காவல் ஆய்வாளர்)** |
| Father's Name/Husband Name | : கின்னியப்பன் |
| Village | : **ஈரோடு** |
| Taluk | : **ஈரோடு** |
| District | : திருப்பூர் |
| Religion | : Hindu |
| Age | : 58 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.08.2026**

**எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஈரோடு மாவட்ட நகர குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 18.06.2019 ம் தேதி 13.30 மணியளவில் அ.பள்ளிப்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி பணியில் இருந்தபோது பாபு த/பெ. இராமலிங்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று பரிசீலனை செய்து முதல் தகவ்ல அறிக்கை பதிவு செய்ய முகாந்திரம் இருந்தபடியால் அன்றைய தினமே அ.பள்ளிப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 84/2019 சட்டபிரிவு 392 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வழக்கை மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

**காவல் உதவி ஆய்வாளர் பெற்ற புகார் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**

**காவல் உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.06.2019 ம் தேதி 14.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் துரைசாமி மற்றும் மாதையன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன்.

**மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**பார்வை மகஜர் அ.சா.ஆ11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சாட்சிகள் பாபு, துரைசாமி, மாதையன், வேடியப்பன், சக்திவேல், மாதேஷ், இராமலிங்கம் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் 03.07.2019 ம் தேதி இவ்வழக்கின் எதிரி காலை 08.45 மணி அளவில் சாமியாபுரம் கூட்டு ரோடு அருகே போலீஸ் பார்ட்டி சகிதம் கண்காணித்துக்கொண்டிருந்தபோது சாமியாபுரம் கூட்டுரோடு பஸ் நிறுத்ததில் சந்தேகப்படும்படி நின்றிருந்தார் எதிரி ராஜன் என்பவர் சாட்சிகள் பழனியப்பன் மற்றும் சுப்பரமணியன் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது எதிரி முன்க்குபின் முரணாக பதில் அளித்தார். அவரை கைது செய்து மேலும் விசாரித்தபோது இவ்வழக்கின் குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரியின் கையொப்பம் பெற்றேன்.

**எதிரி ராஜன் என்பவரம் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினமே காலை 10.00 மணியளவில் அதே சாட்சிகளை முன்னிலையில் பணம் ரூ.1500/– (3x500) கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.

கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**பணம் ரூ.1500/– அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் ஆஜராகி அன்றை தினமே இவ்வழக்கின் புகார்தாரான அ.சா.1 ஐ காவல் நிலையம் வரவழைத்து கைப்பற்றபபட்ட பணம் ரூ.1500/– மற்றும் எதிரியும் அடையாளம் காட்டி மறு வாக்குமூலம் பதிவு செய்தேன்.

சாட்சிகள் பழனியப்பன் மற்றும் சுப்ரமணியன் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

கைபற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

**பணம் ரூ.1500/— அடங்கிய படிவம் 91 அ.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும், 11.07.2019 ம் தேதி காலை 9 மணியளவில் வழக்கின் திருடிபோன ஆஞ்சினேயா என்ற பெயர் பெறிக்கப்பட்ட TN 41 AQ 3615 அசோக் லைலாண்டு லாரியை ஆங்சினேயா லாரி நிறுவனத்தின் ஓட்டுநர் சுரேஷ் த/பெ.அம்மாசை என்பவரிடமிருந்து சாட்சிகள் துரைசாமி, இராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.

**லாரி அடங்கிய கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

கைப்பற்றப்பட்ட லாரியை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

**லாரி அடங்கிய படிவம் 91 அ.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சாட்சிகள் துரைசாமி, இராமகிருஷ்ணன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

மேலும், 03.07.2019 ம் தேதி வழக்கின் சட்டப்பிரிவுகளை 392 இ.த.ச லிருந்து 379 r/w 187 MV ACt 1988 ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இவ்வழக்கின் மற்றொரு எதிரியான உதயா (எ) உதயராஜன் என்பவரை தேடிவந்த நிலையில் 23.09.2019 ம் தேதி 12.30 மணியளிவல் எனக்கு கிடைத்த தகவலின் பேரில் அரூர் ரவுண்டான அம்பேத்கர் சிலை அருகில் சாட்சிகள் பிரபு மற்றும் துரைசாமி ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது எதிரி இவ்வழக்கின் குற்றத்தை ஒப்புக்கொண்டார் அவரை அந்த இடத்திலேயே கைது செய்து மேலும் விசாரித்தபோது தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரியின் கையொப்பம் பெற்றேன்.

***எதிரி உதயா (எ) உதயராஜன் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியான***

*என்னை அழைத்து சென்றால் கோபிநாதம்பட்டி கூட்டு ரோட்டில் ஆடு ஏற்றிய இடத்தை அடையாளம் காட்டுகிறேன்) என்ற பகுதி அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.*

அன்றைய தினமே எதிரியை நிலையம் கொண்டுவந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். சாட்சிகள் பிரபு துரைசாமி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

12.10.2019 ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் ராஜன் மற்றும் உதயா (எ) உதயராஜன் ஆகியோருக்கு எதிராக சட்டபிரிவு 379 இதச உ/இ.187 MV Act படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எனது விசாரணையில் சாட்சிகள் வாக்குமூலத்தில் உள்ளவாறு சொல்லியுள்ளார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

31.05.2019 ம் தேதி சம்பவம் நடைப்பெற்றது என்றால் சரிதான்.

புகார் 18.06.2019 ம் தேதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

புகார் 18 நாட்கள் கழித்து காலதாமதமாக கொடுக்கப்பட்டதுள்ளது என்றால் சரிதான்.

காலதாமதத்திற்கான காரணத்தை புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

காலதாமதத்திற்கான காரணத்தை நான் பாதிக்கப்பட்ட நபரிடம் விசாரித்தேன். அவர் மருத்துவ சிகிச்சையில் இருந்ததாக கூறினார்.

எதிரிகளை இந்த வழக்கில் பொய்யாக சேர்ப்பதற்காக நானாகவே காலதாமதப்படுத்தினேன் என்றால் சரியல்ல.

ஆஞ்சினேயா வண்டியின் உரிமையாளரை நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை.

ராஜன் ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள சாட்சிகள் பாதிக்கப்பட்ட நபரான இராமலிங்கத்தின் ஊரை சேர்ந்தவர் என்றால் சரியல்ல.

காவல் துறையினருக்கு பரிட்சீயமான ஆட்களை சாட்சிகளாக ஒப்புதல் வாக்குமூலத்தில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாமியாபுரம் கூட்டு ரோட்டில் உள்ள கடைகாரார்களை நான் சாட்சியாக சேர்க்கவில்லை.

பொதுவாக திருட்டு வழக்குகளில் கிராம நிர்வாக அலுவலரை வைத்து தான் ஒப்புதல்

வாக்குமூலம் பெறப்படும் என்றால் சரியல்ல.

1 வது எதிரி ராஜன் ஒப்புதல் வாக்குமூலத்தில் கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்ணை ஆய்வு செய்து பார்த்தோமா என்றால் இல்லை.

ஆடுகளை யாரிடம் எதிரிகள் கும்பகோணம் சந்தையில் விற்பனை செய்தார்கள் என்று நான் விசாரித்தேன் ஆனால் கண்டுபிடிக்கமுடியவில்லை.

பாதிக்கப்பட்ட நபரை அழைத்து சென்று எதிரிகளை வைத்து அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை.

எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சட்டப்பிரிவு 187 MV Act க்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சொன்ன தேதி சொன்ன இடத்தில் சொல்லிய விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் சம்பவயிடம் செல்லாமல் சம்பயிடத்தில் சாட்சிகளை விசாரணை செய்யாமல் காவல் நிலையத்திலேயே சாட்சிகளையும் ஆவணங்களையும் தயார் செய்து எதிரியின் மீது ஒரு தவறான குற்றபத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**